# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.

**முன்னிலை: திரு. C. ராஜசேகர், B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

2025–ம் ஆண்டு மார்ச் மாதம் 06–ம் நாள் வியாழக் கிழமை

**I.A.No.4/2025 /in/ O.S.No.20/2022**

கலாவதி :: மனுதாரர் / வாதி

**/எதிர்/**

முருகேசன் :: எதிர்மனுதாரர் / பிரதிவாதி

தங்கதுரை :: வாதி தரப்பு 2–வது சாட்சி

–––––––

இம்மனுவானது 10.02.2025–ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K.நாகராஜன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.போதுராஜா, அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

## உத்தரவு

மனுதாரர் தரப்பில் 14.02.2001–ம் தேதிய கிரைய பத்திர எழுத்தரை நீதிமன்றம் மூலம் சாட்சி சம்மன் அனுப்பி விசாரணை செய்ய அனுமதியளித்து உத்தரவிடவேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 151–ன் கீழ் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர் / வாதி தரப்பு மனு உரையின் சுருக்கம்:**

மனுதாரர் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கினை தாக்கல் செய்து அதில் தற்போது கூடுதல் சாட்சி விசாரணைக்காக வாய்தா

RAJASEKAR C
Digitally signed by RAJASEKAR C
Date: 2025.03.06 10:05:23 +0300

ஏற்பட்டு இருப்பதாகவும், பிரதிவாதி தரப்பில் 14.02.2001–ம் தேதியிட்ட கிரைய பத்திரம் மோசடியானது என்று வாதிடுவதாகவும், எனவே, மேற்படி கிரைய ஆவணத்தை நிரூபிப்பதற்காக அதனை எழுதிய கிரைய பத்திர எழுத்தரை சாட்சியாக விசாரிக்க அனுமதித்து உத்தரவிடுமாறு வேண்டப்பட்டுள்ளது.

3) **<u>எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பு எதிர்உரையின் சுருக்கம்</u>.**

மனுதாரர் தரப்பு மனு உரை சங்கதிகளை மறுப்பதாகவும், மனுவில் 14.02.2001–ம் தேதியிட்ட கிரைய பத்திரம் மோசடியானது என்று ஒப்புக் கொண்டிருப்பதாகவும், அக்கிரைய ஆவணத்தில் பிரதிவாதி கையொப்பம் செய்து கொடுக்கவில்லை என தெரிவித்திருப்பதால், அதனை கையொப்ப நிபுணர் மூலமாகவே நிரூபிக்க இயலும் என்றும், அதனை தவிர்த்து பத்திர எழுத்தர் மூலமாக அதனை நிரூபிக்க இயலாது என்றும், அதன்படி இம்மனுவினை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

5) இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

6) **<u>பிரச்னைக்கான விவாதம் மற்றும் தீர்வு:</u>**

06–01) மனுதாரர் தரப்பு மனு உரையில் அசல் வழக்கில் தற்போது வாதி தரப்பு கூடுதல் சாட்சி விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருப்பதாகவும், பிரதிவாதி தரப்பில் 14.02.2001–ம் தேதியிட்ட கிரைய பத்திரம் மோசடியானது என்றும், அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும் வாதம் முன்னெடுத்திருப்பதால் மேற்படி ஆவணத்தை நிரூபிக்க அதனை எழுதிய கிரைய பத்திர எழுத்தரை சாட்சியாக விசாரிக்க அனுமதித்து உத்தரவிடுமாறு வேண்டப்பட்டுள்ளது.

06–02) இதுகுறித்து எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி கிரைய ஆவணத்தில் உள்ள கையொப்பத்தை மறுத்து எதிர்வாதம் புரிவதால் அதனைப் பொறுத்து

RAJASEKAR C
Digitally signed by RAJASEKAR C
Date: 2025.03.06 10:05:35 +0300

கையொப்ப நிபுணர் மூலமாகவே நிரூபிக்க இயலும் என்றும், பத்திர எழுத்தரை அழைத்து விசாரிப்பது தேவையற்றது என்றும் ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

06–03) இதுகுறித்து பரிசீலிக்கையில், அசல் வழக்கில் 14.02.2001–ம் தேதியிட்ட கிரைய பத்திரம் பிரதிவாதியால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட ஆவணமா ? என்பதைப் பொறுத்து நிரூபிக்க வேண்டிய சுமை வாதி தரப்பில் உள்ளது. மேற்படி ஆவணத்தை எழுதிய பத்திர எழுத்தரை அழைக்கக் கோரும் மனுவினை அனுமதிக்கும் பட்சத்தில், மேற்படி ஆவணத்தின் நிறைவேற்றம் குறித்து அறிந்து கொள்ள இயலும் என்பதாலும், அது அசல் வழக்கினை தீர்மானிக்க உதவிகரமாக இருக்கும் என்பதாலும் இம்மனுவினை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது,

06–04) எதிர்மனுதாரர் தரப்பு எதிர்வாதத்தின்படி உரிய அறிவியல் முறை வாயிலாகவோ அல்லது வேறு எந்த வகையில் நிரூபிக்க வேண்டும் என்றோ எதிர்மனுதாரர் தரப்பால் மனுதாரரரை கட்டாயப்படுத்த இயலாது. மனுதாரர் தரப்பு வழக்கை நிரூபிக்க மனுதாரர் தரப்பே உரிய முறையை தேர்வு செய்ய உரிமை படைத்ததாகும். அதன்படி இந்த முறையில் தான் தனது வழக்கினை நிரூபிக்க வேண்டும் என்று வாதியை இங்கு கட்டாயப்படுத்த இயலாது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும், 14.02.2001–ம் தேதியிட்ட கிரைய ஆவணம் மோசடியானது என மனு உரையில் குறிப்பிட்டு இருக்கும் வாசகமானது தட்டச்சுப் பிழை மற்றும் கவனக்குறைவால் ஏற்பட்ட ஒன்றாக மட்டுமே இருக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுவதால், மேற்படி பிழையை பொறுத்து எதிர்மனுதாரர் தரப்பில் முன்னெடுத்திருக்கும் எதிர்வாதம் குறித்து இங்கு மேலும் பரிசீலிக்க வேண்டிய அவசியம் இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேற்கண்ட விவாதத்தின் முடிவாக இம்மனுவினை அனுமதித்திட இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

RAJASEKAR C

Digitally signed by RAJASEKAR C
Date: 2025.03.06 10:05:42 +0300

7) முடிவாக,

| | |
|---|---|
| 1. | இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத் தொகை இல்லை. |

இந்த உத்தரவானது முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 06.03.2025-ம் தேதியில் அவையறிய பகரப்பட்டது.

RAJASEKAR C Digitally signed by RAJASEKAR C Date: 2025.03.06 10:05:52 +0300

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

**<u>இரு தரப்பிலும் சாட்சி, சான்றாவணங்கள் - இல்லை.</u>**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

I.A.No.4/2025
in
O.S. No.20/2022
FAIR / DRAFT ORDER
Date : 06.03.2025

# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.

**முன்னிலை: திரு. C. ராஜசேகர், B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

2025-ம் ஆண்டு மார்ச் மாதம் 06-ம் நாள் வியாழக் கிழமை

**I.A.No.4/2025 /in/ O.S.No.20/2022**

| | |
|---|---|
| 1. | கலாவதி, க/பெ. லோகேந்திரன், பட்டாளம்மன் கோவில் தெரு, கீழக்கூடலூர் |

.... மனுதாரர் /வாதி

| | |
|---|---|
| 1 | முருகேசன், த/பெ. ராமர், பட்டாளம்மன் கோவில் தெரு, கீழக்கூடலூர் |

... எதிர்மனுதார் / பிரதிவாதி

| | |
|---|---|
| 2 | தங்கதுரை, த/பெ. ராசுத்தேவர், பத்திர எழுத்தர், பட்டாளம்மன் கோவில் தெரு, கீழக்கூடலூர் |

... வாதி தரப்பு 2-வது சாட்சி

மனுதாரர் தரப்பில் 14.02.2001-ம் தேதிய கிரைய பத்திர எழுத்தரை நீதிமன்றம் மூலம் சாட்சி சம்மன் அனுப்பி விசாரணை செய்ய அனுமதியளித்து உத்தரவிடவேண்டி உரிமையியல் நடைமுறை விதிகள், விதி 151-ன் கீழ் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் | 10.02.2025 |
| நீதிமன்ற கட்டணம் | ரூ.20/- செலுத்தப்பட்டது. |

இம்மனுவானது 10.02.2025-ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K.நாகராஜன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.போதுராஜா, அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

RAJASEKAR C

Digitally signed by RAJASEKAR C
Date: 2025.03.06 10:06:01 +0300

**<u>நிறைவேற்றாணை</u>**

| | |
|---|---|
| 1. | இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத் தொகை இல்லை. |

2025–ம் வருடம் மார்ச் மாதம் 06–ம் நாள் எனது கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

RAJASEKAR C

Digitally signed by RAJASEKAR C
Date: 2025.03.06 10:06:10 +0300

***மாவட்ட உரிமையியல் நீதிபதி,***
***உத்தமபாளையம்.***

I.A. No.4/2025
in
O.S. No.20/2022
EX ORDER
Date : 06.03.2025